**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 38/2017**

திருமதி. ராஜேஸ்வரி (D.W –6) **02.09.2025**

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு அ.வ.எண்.38/2017 மற்றும் அ.வ.எண்.98/2021 வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்னுடைய கணவர் இந்த வழக்கில் ஏற்கனவே சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரி. என்னுடைய கணவர் சொல்லி உள்ள சாட்சி விவரங்கள் சரியானவை என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் முதலில் சிவ சண்முகம் ப்ளீச்சிங் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரி. என்னுடைய சகோதரர் என் பெயரில் ஒரு பிளீச்சிங் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரி. அதில் என்னுடைய அப்பாவும் பங்கு எடுத்துக் கொண்டார். தாவா சொத்தில் என்னுடைய தகப்பனார் பிரின்ஸ் டையிங் என்ற நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரி. ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனத்தின் பொருட்களை என்னுடைய அப்பா பிரின்ஸ் டையிங்பயன்படுத்தி வந்தார் என்றால் சரி.

2. அந்த சமயத்தில் என்னுடைய அண்ணன் வாதி இரத்தினசாமியும் என் அப்பாவுடன் சேர்ந்து டையிங் செய்து வந்தார் என்றால் ஆமாம். என்னுடைய அப்பா உரிமையாளர் என்னுடைய அண்ணன் அவருடன் இருந்து பார்த்து வந்தார். என்னுடைய அப்பாவுடன் என் அண்ணனும் பங்குதாரராக இருந்து பிரின்ஸ் டையிங் நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றால் தெரியாது. மாசு கட்டுப்பாட்டு வாரியம் பிரின்ஸ் டையிங் 220 kl தண்ணீர் சுத்திகரிப்புக்கு கொடுத்து வந்தார்கள் என்றால் ஆமாம். நிறுவனத்திற்காக என்னுடைய அப்பாவும் என்னுடைய அண்ணனும் TIC நிறுவனத்தில் கடன் பெற்றிருந்தார்கள் என்றால் சரி. கார்ப்பரேஷன் வங்கிகளும் கடன் பெற்றிருந்தார்கள் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் இறந்த பிறகு வங்கியில் இருந்து கடன் தொகையை திருப்பி செலுத்தும் படி எல்லா வாரிசுகளுக்கும் அறிவிப்பு வந்தது என்றால் ஆமாம்.

3. வங்கி கடனை எல்லா வாரிசுதாரர்களும் சேர்ந்து செலுத்தினீர்களா என்றால் ஆமாம். என்னுடைய தாயார் மட்டும் கடன் தொகையை திருப்பி செலுத்தியதாக சொல்கிறார் என்றால் தவறு, எல்லாரும் கட்டினோம். தாவா சொத்துக்களில் வாரிசு கிரம படி வாரிசுதாரர்கள் பாகம் கோருகிறோம் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் அவருடைய சொத்துக்களை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தினாரா என்றால் இல்லை. என்னுடைய அப்பா வாரிசுகள் அனைவருக்கும் சொத்துக்கள் கொடுக்க வேண்டும் என்று தான் பிரியப்பட்டார். என்னுடைய சகோதரியின் பெயர் சுமதி என்றால் ஆமாம். அவருடைய மகன் பெயர் தயாநிதி என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் அவருடைய சொத்துக்களை செட்டில்மெண்ட் மூலம் என்னுடைய தாயார் கொடுத்து அதன் பிறகு என்னுடைய தாயார் தயாநிதிக்கு அந்த சொத்துக்களை கொடுத்து விட்டதாக சொல்கிறார்கள் என்றால் தவறு.

4. தாவா சொத்துக்களில் யார் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் எல்லா வாரிசுதாரர்களும் கூட்டு சுவாதினத்தில் உள்ளோம். மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் வழங்கப்படும் 220 கிலோ லிட்டர் தண்ணீர் சுத்திகரிப்பு உரிமை என்னுடைய சகோதரருக்கு மட்டும் தான் உண்டு மற்ற வாரிசுதாரர்களுக்கு இல்லை என்றால் தவறு. பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் உரிமையாளராக என்னுடைய சகோதரர் இருந்து வருவதால் அந்த உரிமை அவருக்கு மட்டும் தான் உண்டு என்றால் தவறு.

மற்ற பிரதிவாதிகள் அ.வ.எண். 100/2017 வாதி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.09.02 17:18:43 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.